1974 சனவரி 24]

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்த இரண்டு பாலங்களுக்கும் அரசு அனுமதி அளித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளும் அதேநேரத்தில், அங்குள்ளவர்கள் மறு புறம் செல்வதற்கு முடியாமல் இருப்பதால் இந்த ஆண்டே துவக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஒரு பாலத்திற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்னொரு பாலத்திற்கு அரசின் பரிசீலனை முடிந்தபிறகு ஆணை பிறப்பிக்கப் படும்.

ஜெயமங்கலம், மேல்மங்கலம் சாலையிலுள்ள பாலத்தை அகலப்படுத்தல்.

*139 வினா—**திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஜெயமங்கலத்துக்கும், மேல்மங்கலத் துக்கும் இடையில் உள்ள திருப்பத்தில் உள்ள பாலத்தை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

கள்ளு, சாராயக் கடைகளின் ஏலத்தொகை.

*52 வினா—**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பு ஆண்டில், சாராயக் கடைகள் ஏலம் விடப் பட்டதன் மூலம், ஜூலை 30-ஆம் நாள் முடிய கிடைத்தத் தொகை எவ்வளவு?

(இ) சென்ற ஆண்டு, அதாவது செப்டம்பர் 30-ஆம் நாள் வரையிலான ஆண்டிற்கு, சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் ஏலம் விடப்பட்டதன் மூலம் கிடைத்த மொத்தத் தொகை எவ்வளவு?

[1974 சனவரி 24

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) நடப்பு ஆண்டின் ஏலம் ஜூலை முப்பதாம் தேதியுடன் முடியவில்லை. இது வரை ஏலம் போனதில் எதிர்பார்க்கும் தொகை ரூ. 30.69 கோடி.

(இ) கடந்த குத்தகையாண்டு ஆகஸ்டு 31-ம் தேதியுடன் முடிவுற்றது. அவ்வாண்டில் கள்ளு சாராயக் கடைகளின் ஏலத் தொகை ரூ. 30.38 கோடி.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the abolition of toddy and in view of the fact that selling price of high class liquor in this part of the country is low, is the Government aware that there is huge smuggling of whisky and brandy and other high class liquors from here. If I take one bottle of whisky to Delhi, I can get Rs. 20 extra.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அதுபோன்று பெருமளவில் கடத்தல் இருப்பதாகத் தகவல் இல்லை. இந்த மூலக்கேள்வியில் எவ்வளவு வருமானம் என்று கேட்கப்பட்டிருப்பதால் அந்த விவரங்கள்தான் இப்பொழுது இருக்கிறது. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இப்பொழுது கள்ளுக்கடை, சாராயக்கடைகளை மூடுவதன் மூலம் சுமார் 30 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலிருந்து தெரிகிறது. இப்பொழுது தமிழ் நாட்டிலே சாராயம் காய்ச்ச தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டு சாராயம் காய்ச்சுகிறார்கள். அங்கே உற்பத்தி யாகும் சாராயத்தை என்ன செய்யப் போகிறார்கள்? வெளியிலே அனுப்பி அதனால் ஏதாவது சம்பாதிக்க வேண்டுமென்றால் வரி போட்டு ஈடுகட்ட ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தச் சாரா யத்தை வேறு தொழிலுக்கு உபயோகப்படுத்தலாமா என்று பரிசீலிக்கப்படுகிறது. இப்பொழுது செப்டம்பர் மாதம் வரையில் இந்த சாராயம் அனுமதிக்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், 30 கோடி ரூபாய் வருமானம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது பேப்பரில் எழுதப்பட்ட தொகையா, அல்லது ஏலம் விட்டு ஆக்சு

1974 சனவரி 24]

வலாகக் கிடைத்த தொகையா? ஆக்சுவலாகக் கிடைத்த தொகை எவ்வளவு? ஏலத்தொகைக்கும் ஆக்சுவலாகக் கிடைக்கும் தொகைக்கும் வித்தியாசம் எவ்வளவு இருக்கும் என்று பார்த்தால் தெரியும். கட்ட முடியாமல் விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். எனவே வசூல் எவ்வளவு ஆயிற்று? எத்தனை கோடி ரூபாய் நஷ்டம்? மேலும், சாராயத்தை வேறு தொழிலுக்குப் பயன் படுத்துவது பற்றிச் சொன்னார்கள். என்ன தொழிலுக்குப் பயன்படுத்தப் போகிறார்கள்? இவ்வளவு சாராயத்தையும் எந்தத் தொழிலுக்குப் பயன்படுத்தப் போகிறார்கள் என்று விளக்கமாகச் சொன்னால் பரவாயில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் கொடுத் திருக்கின்ற கணக்கு ஏலத்திற்குக் கோரப்பட்ட தொகை. அதைக் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது 30.69 கோடி ரூபாய் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கே இந்தக் கணக்குதான் இப் பொழுது தரப்பட்டுள்ளது. வசூல் அந்தந்த மாதத்திலே வசூலாகிறது. இன்டஸ்ட்ரியல் ஆல்கஹால், இன்டஸ்ட்ரிசுக்குப் பயன்படுத்தலாம் என்ற குறிப்பிருக்கிறது. எந்தெந்த இன்டஸ்ட்ரிசுக்குப் பயன்படுத்தலாம் என்ற விவரம் அரசாங்கத் தின் பரிசீலனையில் இருக்கிறது.

திசையன்விளையில் கள் குடியால் இறந்தவர்கள்.

*53 வினா—**திரு. கே. டி. கே. தங்கமணி :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையில், 12-6-1973-ஆம் நாளன்று அல்லது அந்நாளளவில், கள் குடித்து 8 பேருக்கு மேல் இறந்து விட்டார்கள் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ), (இ) & (உ) 3-6-1973 அன்று, திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், குட்டம் கிராமத்திலுள்ள சேகரிப்பு முனையில் 17 பேர் கள் குடித்தனர். அவர்களில், 8 பேர் மருத்துவ சிகிச்சை அளிப் பதற்கு முன்னரேயே உடனடியாக இறந்தனர். எஞ்சிய 9